மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1980) சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

---

@ 1980 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1980 ஆகஸ்ட் 5]

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1980) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS